**கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், பொ.ப.து., நீர்வள ஆதார அமைப்பு, திட்ட உருவாக்க வட்டம், திருச்சிராப்பள்ளி-620 020.**

**முன்னிலை : பொறி.வீ.சண்முகநாதன்.,பி.இ.,**
**சிறப்பு தலைமைப் பொறியாளர்,பொ.ப.து, (கூ/பொ)**

**செ.மு.ஆணை.எண். 695-7/2019/நிஎ1/சி.ஆர்.3வரு/நாள்:13.07.2019**

பொருள் : நியமனம் (நேரடி) – தமிழ்நாடு அமைச்சுப்பணிதொகுதி – தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2015-2016, 2016-2017 மற்றும் 2017-2018ல் நடத்தப்பட்ட போட்டித்தேர்வு – தொகுதி IV -ல் அடங்கிய பணிகளுக்கானது – இளநிலை உதவியாளர்கள் பதவிக்கு தெரிவு செய்து பொதுப்பணித்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட பணிவேட்பாளர்கள் - திரு.லோ.கோகுல், இளநிலை உதவியாளர் மற்றும் திருமதி.வ.மீனாம்பிகை, இளநிலை உதவியாளர் - இவ்வட்ட அலுவலகத்தில் பணியில் சேர்ந்தமை – அவர்தம் பதவியில் பணிவரன்முறை செய்துதகுதிகாண் பருவம் துவங்குதல் - ஆணை.

பார்வை :

1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வணையம், சென்னை-3, அவர்களின் கடித எண். 1150/பி.எஸ்.டி.எச்.2/2019/ நாள்: 18.02.2019.
2. முதன்மை தலைமை பொறியாளர், நீ.ஆ.து., மற்றும் தலைமைப்பொறியாளர் (பொது), பொ.ப.து., சென்னை அவர்களின் செ.மு.எண்.எஸ்.3(3)/25366/2019/நாள்: 25.02.2019.
3. தலைமைப் பொறியாளர், பொ.ப.து., திட்ட உருவாக்கம், நீ.ஆ.து., சென்னை அவர்களின் செ.மு.எண்: எஸ்1(2)/ 0772/ 2019/ நாள்: 08.03.2019.
4. இவ்வலுவலக செ.மு.எண். 695-1/2019/நி2/நாள்: 08.03.2019.
5. இவ்வலுவலக செ.மு.எண். 695-3/2019/நி2/நாள்: 08.03.2019.
6. திரு.லோ.கோகுல், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியேற்பு அறிக்கை நாள்:14.03.2019.
7. திருமதி.வ.மீனாம்பிகை, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியேற்பு அறிக்கை நாள்:11.03.2019.

********

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தால் 2017-18ம் ஆண்டில் நடத்தப்பெற்ற போட்டித்தேர்வில் (தொகுதி IV-ற்கானது) தேர்ச்சி பெற்று இளநிலை உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்ட திரு.லோ.கோகுல் மற்றும் திருமதி.வ.மீனாம்பிகை ஆகியோர் பார்வையில் காணும் (1) முதல் (5) வரையிலான செயல்முறை ஆணைகளின்படி இவ்வட்ட அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்ததை தொடர்ந்து, தமிழ்நாடு

அரசுப்பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016 (தமிழ்நாடு சட்டம்14/2016)ன் பிரிவு 28ன் படி திரு.லோ.கோகுல், இளநிலை உதவியாளராக பதவியில் சேர்ந்த நாளான 14.03.2019 முற்பகல் முதலும் திருமதி.வ.மீனாம்பிகை இளநிலை உதவியாளராக பதவியில் சேர்ந்த நாளான 11.03.2019 முற்பகல் முதலும் பணிவரன்முறை செய்து இதன்மூலம் உத்திரவிடப்படுகிறது.

இதன்தொடர்ச்சியாக திரு.லோ.கோகுல், இளநிலை உதவியாளர் மற்றும் திருமதி.வ.மீனாம்பிகை இளநிலை உதவியாளர் ஆகியோர் பணியில் சேர்ந்த நாளான முறையே 14.03.2019 முற்பகல் முதலும் மற்றும் 11.03.2019 முற்பகல் முதலும் பணிவரன்முறை செய்யப்படுவதை தொடர்ந்து, தனியர்களுக்கு இளநிலை உதவியாளர் பதவியில் மூன்றாண்டுகால தொடர்பணிக்குட்பட்ட இரண்டாண்டு கால தகுதிகாண் பருவம் துவக்கப்படுகிறது.

மேலும் இவர்கள், இளநிலை உதவியாளர் பதவியில் தமது மூன்றாண்டுகால தொடர்பணியில் தமது இரண்டாண்டு கால பணியினை திருப்திகரமாக நிறைவு செய்தல் வேண்டும் எனவும் இத்தகுதிகாண் பருவ காலத்தில் இவர்கள் பவானிசாகர், அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தால் நடத்தப்பெறும் இளநிலை உதவியாளர்களுக்கான அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சித் தேர்வில் தேர்ச்சி பெற வேண்டும் எனவும் ஆணை வழங்கப்படுகிறது.

மேற்கண்ட பணிவரன்முறையானது, சென்னை உயர்நீதிமன்ற சென்னை மற்றும் சென்னை உயர்நீதிமன்ற மதுரைக்கிளையின் ஒருங்கிணைந்த குடிமை பணிகளுக்கான தேர்வு தொகுதி IV-ன் நியமனம் தொடர்பாக தொடுக்கப்பட்டுள்ள வழக்குகளில் நீதிமன்றம் வழங்கப்படவுள்ள தீர்ப்புக்குட்பட்டது என்ற நிபந்தனையுடன் மேற்கண்ட பணிவரன்முறை ஆணை வழங்கப்படுகிறது.

15.7.19

சிறப்பு தலைமைப்பொறியாளர், பொ.ப்து.,சார்பில்.,
திட்ட உருவாக்க வட்டம், நீ.ஆ.து., திருச்சி -20.

15.7.19

பெறுநர்:

1. திரு.லோ.கோகுல்,
   இளநிலை உதவியாளர்,
   திட்ட உருவாக்க வட்டம்,
   திருச்சி-20.
2. திருமதி.வ.மீனாம்பிகை,
   இளநிலை உதவியாளர்,
   திட்ட உருவாக்க வட்டம்,
   திருச்சி-20.

/Attested/

8/12/21

உதவிப் பொறியாளர், பொ.ப.து.நீ.வ.ஆ.
அணைப் பிரிவு, பவானிசாகர்
பவானிசாகர் – 638 451